# சிலப்பதிகாரத்தில் கோவலன் - பாத்திரப்படைப்பு

முனைவர் உ.கருப்பத்தேவன்

*உதவிப்பேராசிரியர் & தலைவர் (பொ)*

*ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம்,*

*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை– 21.*

**முன்னுரை**

"சிலப்பதிகாரத்தில் கோவலன் பாத்திரப்படைப்பு" என்னும் பொருண்மையில் அமைந்துள்ள இவ்ஆய்வுக் கட்டுரையில் கோவலனின் பாத்திரப் படைப்பாக்கத்திறன் கோவலனது பண்புநிலைகளைக் கொண்டு விரிவாகப் பகுப்பாய்வு செய்து விளக்கப்பெற்றுள்ளன.

**சிலப்பதிகாரத்தில் கோவலன் அறிமுகம்**

இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரக் காப்பியத்தில் கோவலனைப் பண்பும் புகழும் நிறைந்தோனாக அறிமுகப்படுத்துகின்றார். குறைபாடுகள் இல்லாதவனாக அறிமுகப்படுத்தப்பெறும் கோவலன், பின்னர் குணக்குறைபாடு உடையவனாகின்றான். இறுதியில் மதுரையில் பாண்டிய மன்னனின் ஆணையால் 'திருடன்' எனக் குற்றம் சாட்டப்பெற்றுக் கொலை செய்யப்படுகின்றான்.

***"மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்***
***பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்***
***கண்டேத்துஞ் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலாற்***
***கொண்டேத்துங் கிழமையான் கோவலன்"*** ***(மங்கலவாழ்த்து, வரி.36-39)***

உலகம் சிறிதாகுமாறு கோவலன் புகழ் ஓங்கி வளர்ந்தது; மதிபோன்ற ஒளிபொருந்திய இனியமுகத்தையும் பண்ணினும் இனிமையான மொழியினருமாகிய இளம்பெண்கள் கண்களால் கண்டு போற்றித் தொழுவதற்குரிய முருகப் பெருமானே கோவலன் எனப்பாராட்டி அவனிடம் அன்புடையர் ஆயிரை; அவன் பெயர் கோலன் என இளங்கோவடிகள் கோவலனை அறிமுகம் செய்கின்றார். இப்பாடலடிகளில் 'செவ்வேள்' என்பது குறியீடு. கண்ணாரக் கண்டு போற்றுவதற்குரிய முருகப்பெருமான் என்பதால் அவன் பேரழகன்; பெரும் வீரன் என்பது அறியப்படுகின்றது. இளங்கோவடிகளின் நோக்கம் இளம்பெண்களுக்குக் களங்கம் ஏற்படுத்துவதன்று; கோவலனின் பேரழகினைச் சிறப்பிப்பதாகும்.

காப்பியத் தலைவனைச் சிறப்பாக அறிமுகப்படுத்தும் காப்பியப் புலவர்கள் இம்முறையினைப் பின்பற்றியுள்ளனர். சீவகனை அறிமுகம் செய்யும் திருத்தக்ககத்தேவர், நங்கையர் சீவகனைக் கண்டதும் அவர்களைக் காமத்தீ எரிக்கத் தம்இடையில் அணிந்திருந்த மேகலை நழுவி அவர்தம் மெல்லடியைச் சேர்ந்தது; கைவளையல்கள் கழன்று வீழ்ந்தன என அறிமுகம் செய்கின்றார்; சீவகன் பேரழகுடையவன் என்பதைக் கூறுவதே திருத்தக்கதேவரின் நோக்கமாகும்.

***"வட்டுடை பொலிந்த தானை வள்ளலைக் கண்டபோழ்தே***
***பட்டுடை சூழ்ந்தகாசு பஞ்சிமெல்லடியைச்சூழ***
***அட்டரங் கனைய செவ்வாய் அணிகலங் கருதிக்காமக்***
***கட்டழல் எரிப்ப நின்றார் கைவளை கழலநின்றார்"*** ***(சீவகசிந்தாமணி, பா.எண்.468)***

இராசமாபுரத்து இளம்பெண்களின் அழகு சித்தியில் சிறந்த சிந்தையுடைய துறவிகளையும் இல்லறத்தில் ஈர்க்கும் தன்மையுடையது (சீவக.பா.எண்.1946) எனக் கூறும் திருத்தக்கத்தேவர், துறவிகளின் ஒழுக்கத்திற்கு இழுக்குக் கற்பிக்காமல் இளம்பெண்களின் மாண்புறு அழகினைப் பாராட்டுகின்றார். இவ்வாறே "காதலாற் கொண்டேத்துங் கிழமையான்" என்னும் இளங்கோவடிகளின் கூற்றும் கோவலனின் பேரழகினைப் பாராட்டுவதே; இளம் பெண்களின் கற்பினைக் களங்கப்படுத்துவதன்று.

**அடைக்கலக் காதையில் கோவலன் பெருமை**

மண்தேய்த்த புகழ் கொண்ட கோவலனின் பெருமை, புகார்க் காண்டத்தில் அறிமுகத்தோடு நின்று விடுகின்றது. அவன் எவ்வாறு இத்தகைய புகழினைப் பெற்றான் என்ற செய்தியை இளங்கோவடிகள் புகார்க் காண்டத்தில் விளக்கிக் கூறவில்லை. அவர் புகார்க் காண்டத்தில் கண்ணகியின் பொறுமை என்னும் பெருங்குணத்தையே பல்வேறு நிலைகளில் விளக்கிக் கூறியுள்ளார். ஆயினும் இளங்கோவடிகள் மதுரைக் காண்டத்தின் அடைக்கலக்காதையில் கோவலன் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் இத்தகைய பெரும்புகழை அவன் ஈட்டியதற்குக் காரணமான அருஞ்செயல்கள் விளக்கிக் கூறப்பெற்றுள்ளன.

அடைக்கலக் காதையில் மறைவல்லோனாகிய மாடலன் கோலனின் துன்பநிலையைக் கண்டு அவனது அரும்பெரும் குணங்களை எடுத்துவைத்துப் பேசுகின்றான். குன்றன்ன பெருஞுசெல்வத்தின் திளைத்த கோவலன், அச்செல்வத்தையெல்லாம் இழந்து தன்மனைவியாகிய கண்ணகியுடன் வாடி மெலிந்து வேற்றூருக்கு வந்திருப்பதைக் கண்ட மாடலன் உள்ளம் திடுக்கிட்டு வருந்துகின்றது. மாடலன், கோவலனின் நற்குணங்கள் முழுவதையும் நன்கறிந்தவன்; எனவே எதிர்பாராத நிலையில் கோவலனை அவனது துன்பச்சூழலில் சந்தித்த மாடலன் நினைவுகளில் கோவலனின் நற்பண்புகள் ஒவ்வொன்றாக நினைவுக்கு வருகின்றன.

**கோவலன் - கருணை மறவன்**

கோவலன் மாதவிக்கும் தனக்கும் பிறந்த பெண்குழந்தைக்கு ‘மணிமேகலை’ என்னும் தன்குல தெய்வத்தின் பெயரினை இட்டு விழாக் கொண்டாடினான். அப்போது அவ்விழாவில் அவனிடம் பொருளைப் பெறுவதற்காக வயது முதிர்ந்த மறையோன் ஒருவன் தளர் நடையோடு தண்டு ஊன்றி வந்தான். மதங்கொண்ட யானை ஒன்று அம்மறையோனைக் கைப்பற்றியது. இதனைக்கண்ட கோவலன் அக்கடக் களிற்றினை அடக்கினான். அவன் தன்னுயிரையும் பொருட்படுத்தாது வயதுமுதிர்ந்த மறையோனைக் காப்பாற்றினான். இதனை நினைவுகூர்ந்த மாடலன் கோவலனை,

***“மையிருங் குன்றின் விஞ்சையன் ஏய்ப்பப்***
***பிடர்த்தலை இருந்து பெருஞ்சினம் பிறழாக்***
***கடக்களி றடக்கிய கருணை மறவ!”(சிலம்பு. அடைக்கலக்காதை, வரி:51-53)***

எனப் பாராட்டுகின்றான்.

**கோவலன் - செல்லாச் செல்வன்**

கோவலன், வள்ளன்மையால் சிறந்த பண்புடையவன்; தன் மனைவி கீரிப்பிள்ளையைக் கொன்ற கொலை பாவச் செயலுக்காக ஒரு அந்தணன் அவ¬ வெறுத்துப் பிரிந்தான். அவன் மனைவி பொறுத்துக் கொள்ளுமாறு அவனை மன்றாடி வேண்டியபோது அந்த அந்தணன் வடமொழி வாசகம் ஒன்றினை அவன் கையில் கொடுத்து ‘இவ்வாசகத்தில் உள்ளவாறு புண்ணியம் செய்து உன் பாவத்தை நீக்கிக்கொள்’ எனக்கூறி அவளைவிட்டு நீங்கினான். அவள் அவ்வாசகத்தின் பொருளைத் தெரிந்தவர்களைத் தேடி அலைந்தாள். இறுதியில் அவள் கோவலனைக் கண்டு தன்நிலையை விளக்கினாள். கோவலன் வடமொழி வாசகத்தில் உள்ளவாறு தானங்களைச் செய்து அவள் துன்பத்தைப் போக்கினான். பின்னர் அவளை அவளுடைய கணவனாகிய அந்தணனுடன சேர்த்து அவர்கள் நன்றாக வாழ்வதற்குப் பெரும் பொருளையும் கொடுத்து உதவினான். இவ்வாறு கோவலன் பிறர்க்கென வாழ்ந்த உயர்ந்த உள்ளத்தையும், வரையாது வழங்கும் வள்ளன்மையையும் அறிந்த மாடலன் கோவலனை,

***“ஒத்துடை அந்தணர் உரைவிற் கிடக்கையில்***
***தீத்திறம் புரிந்தோள் செய்துயர் நீங்கத்***
***தானஞ் செய்தவள் தன்துயர் நீக்கிக்***
***கானம் போன கணவனைக் கூட்டி***
***ஒல்காச் செல்வத்து றுபொருள் கொடுத்து***
***நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ”                    (சிலம்பு. அடைக்கல., வரி:70-75)***

எனப் பாராட்டிக் கூறுகின்றான்.

**கோவலன் - இல்லோர் செம்மல்**

வறியோரைப் பாதுகாக்கும் நற்பண்பும் கோவலனிடம் நிறைந்து காணப்படுகின்றது. ஒரு கணவன் தன் பத்தினியான மனைவியின் கற்பொழுக்கத்தில் பொறப்பழி சுமத்தினான். அதற்கு வறிஞன் ஒருவனைப் பொய்ச்சான்று கூறும்படி செய்தான். பொருளாசையில் பொய்ச்சான்று கூறிய அவ்வறியவனை நெறிய தவறியவனைப் புடைத்துண்ணும் தன்மையுடைய பூதம் தன் பாசத்தினிடத்தே அகப்படுத்தியதை அவன்தாய் கண்டு பெருந்துன்பம் அடைந்தாள். அதைக்கண்ட கோவலன் அப்பாசத்தின் உள்ளே தான் புகுந்து ‘தன்னுயிரைக் கைக்கொண்டு இவனுயிரைத் தருவாயாக’ என்று பூதத்தை இரந்து வேண்டினான். அதற்கு உடன்பாடாத பூதம் ‘இக்கீழ்மகனுடைய உயிர்க்கு நின் நல்லுயிரைக் கொன்று மேற்கதி இழக்கும் பண்பு தன்னிடம் இல்லை’ எனக்கூறி அக்கீழ்மகனைப் புடைத்து உண்டது. அதனைக் கண்டு ஆறாத்துயரம் கொண்ட அவன் தாயைக் கோவலன் அழைத்துச் சென்று அவளுக்கும் அவளுடைய சுற்றுத்துக்கும் உணவு தந்து பல்லாண்டுகள் பாதுகாத்தான். இத்தகைய ஈரநெஞ்சனனாகிய கோவலனை மாடலன்,

***“அழிதரும் உள்ளத் தவளோடும் போந்தவன்***
***சுற்றத்தோர்க்கும் தொடர்புறு கிளைகட்கும்***
***பற்றிய கிளைஞரின் பசிப்பிணி யறுத்துப்***
***பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்” (சிலம்பு. அடைக்கல. வரி:87-90)***

எனப் புகழ்ந்து பேசுகின்றான். இத்தகைய நற்பண்புகள் கொண்ட கோவலன் செயல்களை மாடலன் “இம்மை செய்தனடயானறி நல்வினை” என்கின்றான்.

**கோவலனின் எளிமை**

கோவலன் மக்களிடம் சமூகப் படிநிலையில் ஏற்றத்தாழவு காணாமல் அனைவரிடமும் சமநிலையில் மனமொன்றிப் பழகும் தன்மையுடையவன். அவன் கவுந்தியடிகளோடும் கண்ணகியோடும் மதுரைக்குச் செல்லும் வழியில் வைகறைப் பொழுதில் ஒழுக்கத்தில் வழுவிய பார்ப்பனர் உறையும் பகுதியை அடைந்து அங்கு இசைபாடும் பாணர்களோடு தானும் ஒருவனாகச் சேர்ந்து யாழிசைக்கின்றான். புகார் நகரத்து வீதிகளில் தென்றல் காற்று பண்ணிசைக்கும் வண்டுகளோடும் இனிய இளவேனிலோடும வீசுவது, கோவலன் இசைப் பாணரோடும் நகரப்பரத்தரோடும் திரிவது போல இருப்பதாக இளங்கோவடிகள் கூறுகின்றார்.

“குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு திரிதரு மரபிற் கோவலன் போல இளிவாய் வண்டினொ டின்னிள வேனிலொடு மலைய மாருதந் திரிதரு மறுகில்” இதிலிருந்து கோவலன் பாணர், பரத்தர் என்னும் சமூகப்படி வேறுபாடு கருதாமல் சமுதாயத்தில் எத்தகையவரோடம் எளிமையாகவும் இனிமையாகவும் பழகும் பண்புடையவன் என்பதை அறியலாம்.

**கோவலனின் சால்புடைமை**

இன்னா செய்தார்க்கும் இனியனவே செய்யும் சால்புடைமை கோவலனிடத்தில் சிறந்து காணப்படுகின்றது. அவன் கவுந்தியடிகளோடும் கண்ணகியோடும் ஓடத்திலேறிக் காவிரியின் தென்கரையை அடைகின்றான். மூவரும் ஒரு பூம்பொழிலில் தங்குகின்றனர். அப்போது அங்குவந்த ஒரு காமுகனும் வம்பப் பரத்தையும் கோவலனும் கண்ணகியும் காமனும் ரதியும் போல இருப்பதாகக் கூறி அவர்கள் யாரெனக் கவுந்தியடிகளை வினவுகின்றனர். அவர்களுக்குக் கவுந்தியடிகள் ‘அவர்கள் என் மக்கள்; வழிப் பயணத்தால் மிக் வருத்தமுற்றுள்ளனர். அவர்களை அணுகாமல் நீங்குக’ என்கின்றார். ‘ஒரே வயிற்றில் பிறந்தவர்கள் கணவன் மனைவி ஆதல் உண்டோ?’ என அவர்கள் எள்ளி நகையாடினர். அதைக்கேட்ட கண்ணகி தன் செவிகளைப் பொத்தி நடுங்கினாள். கவுந்தியடிகள் சினமுற்று அவர்கள் இருவரையும் “முள்ளுடைக்காட்டில் முதுநரியாகுக” எனச் சபிக்கின்றார். அவ்வாறே காமுகனாகிய அத்தூர்த்தனும் பரத்தையும் நரிகளாகி ஊளையிட்டனர். கோவலன் கவுந்தியடிகள்,

***“நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்***
***அறியாமையென் றறிதல் வேண்டும்***
***செய்தவத் தீர்ந் திருமுன் பிழைத்தோர்க்***
***குய்திக் காலம் உரையீரோ?” (சிலம்பு, புகார், நாடுகாண் காதை, வரி.237-240)***

என வேண்டுகின்றான். அதற்குக் கவுந்தியடிகள் இந்நெறி தவறியவர்கள் உறையூர் நொச்சிக் காட்டில் ஓராண்டுக்காலம் நரிகளாகத் திரிந்த பின்னர் தன் பழைய உருவத்தைப் பெறுர் என சாபவிடை செய்து அருளுகின்றார்.தன்னையும் தன்மனைவியையும் இகழ்ந்துரைத்த கயவர்களுக்கும் கோவலன் காட்டும் இரக்கம் அவனது சால்புடைமைப் பண்பிற்குத் தக்க சான்றாகும்.

**கண்ணகியிடம் கொண்ட காதல்**

கோவலன் கண்ணகியைத் திருமணம் செய்து கொண்டதும் அவளது உடலழகில் தன்மனத்தைப் பறிகொடுத்துப் பலவாறு பாராட்டினான். பொலிவுடன் விளங்கிய அவளது நுதலின் அழகு அவன் உள்ளத்தைக் கவர்ந்தது. கண்ணகி அவனுக்குத் திருமகளாகத் தோன்றினாள். 'மாசறு பொன்னே', 'வலம்புரி முத்தே', 'காசறு விரையே', 'கரும்பே', 'தேனே' என்று பலவாறு பாராட்டினான். இதிலிருந்து கோவலன், கண்ணகியிடம் கொண்டிருந்த அன்பின் மிகுதியை அறியலாம்; ஆயினும் அவன் கண்ணகியைப் பிரிந்து பரத்தையர் குல மாதவியைச் சென்றடைந்தான். மாதவியின் பொருட்டுக் கண்ணகியைப் பிரிந்த கோவலன் மீண்டும் தன் இல்லத்திற்குத் திரும்பாமல் பல ஆண்டுகள் மாதவியோடு வாழ்ந்தான். கண்ணகியிடம் தீராக்காதல் கொண்டு கசிந்து உருகிய கோவலன் அவளை அறவே மறந்து மாதவியோடு வாழந்தான். கண்ணகியும், மாதவியைப் போன்று பேரழகு உடையவளே. கண்ணகியின் பேரழகு இளங்கோவடிகளால் "போதிலார் திருவினாள் புகழுடை வடிவு" (சிலம்பு. புகார், மங்கல வாழ்த்து, 86) எனச் சிறப்பிக்கப் பெற்றுள்ளன. திருமகளின் வடிவமாகவே கண்ணகி விளங்கினாள். மாதவியின் இணையற்ற கலைத்திறன் கோவலனைக் கவர்ந்திருக்கலாம். கோவலன் அடிப்படையில் கலைஞன். பின்னரே வணிகன். கடற்கரைச் சோலையில் மாதவி நீட்டிய யாழினை வாங்கிய கோவலன் ஆற்றுவரியும் கானல்வரியுமாகிய பலபாடல்களைப்பாடி மாதவியை மகிழ்வித்தான்.

> ***"கோவலன் கையாழ் நீட்ட அவனும்***
> ***காவிரியை நோக்கினவும் கடற்கானல் வரிப்பாணியும்***
> ***மாதவி தன்மனம் மகிழ வாசித்தல் தொடங்குமமன்"***

***(சிலம்பு. புகார். கானவல்ரி. வரி.18-20)***

மதுரைக்குச் செல்லும் வழியில் கோவலன் பாணர்களுடன் சேர்ந்தாலும் யாழ் வாசிக்கின்றான் (சிலம்பு. மதுரை. புறஞ்சேரி இறுத்த காதை, வரி:105-113) செங்கோட்டி யாழில் இசைக்கும் இசைப்புலமை கோவலனுக்கு இருந்தது. மிகப்பெரிய தனது துன்பநிலையிலும் கோவலன் பாணர்களோடு சேர்ந்து அவற்றை மறந்து யாழிசைக்கின்றான். இத்தகைய கலைஞனை மாதவியின் கலைத்திறம் இயல்பாகவே ஈர்த்தது எனலாம்.

**வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்தான்**

மாதவி அரங்கில் ஆடி சோழ மன்னனின் பச்சை மாலையையும் தலைக்கோல் அரிவைப் பட்டத்தையும் பெற்றாள். மாதவியின் தாய் அம்மாலையை ஒரு கூனி கையில் கொடுத்து இம்மாலை ஆயிரத்தெண் கழஞ்சு பொன்பெறுவது. இதனை விலைகொடுத்துப் பெறுபவன் மாதவிக்கு மணமகன் ஆவான் என்றான். அக்கூனி நகர நம்பியர் உலாவரும் வீதியில் அம்மாலையோடு நின்றாள். கோவலன் அம்மாலையை விலைக்கு வாங்கி மாதவி இல்லத்தை அடைந்தான். அன்றே கோவலன் தன் மனையையும் மனைவியையும் மறந்து மாதவியை ஒருபொழுதும் நீங்காத விருப்புடையவன் ஆயினான்.

> ***"மணமனை புக்கு மாதவி தன்னொடு***
> ***அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி***
> ***விடுத லறியா விருப்பின னாயினன்***
> ***வடுநீங்கு சிறப்பின்தன் மனையம் மறந்தென"***

***(சிலம்பு.புகார். அரங்கேற்று காதை, வரி:171-1175)***

கோவலன் மாதவியின் அழகு, ஆடல், பாடல் இவற்றுள் எழில் மயங்கி ஆயிரத்தெண் பொன்கழஞ்சு கொடுத்து விலைக்கு வாங்கினான் என்பதை இளங்கோவடிகள் தெளிவாக விளக்கவில்லை. கண்ணகியிடம் கோவலன் கொண்டிருந்தது தீராக்காதல்; அவன் மாதவியோடு வாழ்ந்த போதும் அவனது அடிமனத்தில்

கண்ணகி மீதான காதல் ஆழ்ந்திருந்தது. அவளைப் பிரிந்த தவற்றினால்தான் கோவலன் இறுதியில் தன் பெருமைகளை இழந்து அழிகின்றான்.

**திருந்திய கோவலன் நிலை**

கானல்வரியில் முழுவதுமாக மாதவியைப் பிரிந்து வந்த கோவலன், கண்ணகி வருத்தத்தால் வாடி மெலிந்த தன்மையைக் கண்டு,

***“சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடிக்***
***குலந்தரு வான்பொருள் குன்றத் தொலைந்த***
***இலம்பாடு நாணுத்தரும் எனக்கு”***

***(சிலம்பு.புகார். கனாத்திறம் உரைத்த காதை, வரி.69-71)***

என்கின்றான். கோவலன் னக்கு அழிவு ஏற்படுவதற்கு முன்பே தன் தவற்றினை உணர்ந்தான்; அவன் தன் அழிவினைத் தவிர்த்து இருக்கவேண்டும்; ஆயினும் அவனால் இயலவில்லை.கவுந்தியடிகள், கண்ணகியோடு கோவலன் மதுரைக்குச் செல்லும் வழியில் வழுவிய பார்ப்பனர் வாழும் பகுதியில் வைகறைப் பொழுதில் ஒரு நீர்நிலையருகே மாதவியால் அனுப்பப்பட்ட கோசிகன் என்னும் அந்தணனைக் காணுகின்றான். கோசிகன் மாதவி எழுதிய முடங்கலைக் கோவலனிடம் கொடுத்தான். அம்முடங்கலில் மாதவி,

***“அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்***
***வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்***
***குரவர்பணி யன்றியுங் குலப்பிறப் பாட்டியோடு***
***இரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது***
***கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்***
***பொய்தீர்க் காட்சிப் புரையோய் போற்றி”***

***(சிலம்பு. மதுரை. புறஞ்சேரி இறுத்த காதை, வரி:87-92)***

எனக் குறிப்பிட்டிருந்தாள். இம்முடங்கலைக் கோவலன் படித்த பின்னரே மாதவி குற்றமற்றவள் என அறிகின்றான். அதுவரையில் மாதவி பரத்தமைத் தன்மையள் என்றும், அவள் மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாள் என்றும் கோவலன் நினைத்திருந்தான். மாதவியின் இம்முடங்கல் அவளது தூய தன்மையைக் கோவலனுக்கு உணர்த்தியது. கோவலன் மாதவியைப் பழித்ததும் வெறுத்ததும் தன் தவறு என உணர்கின்றான்.

***“தன்தீது இலள்எனத் தளர்ச்சி நீங்கி***
***என்தீது என்றே எய்தியது உணர்ந்தாங்கு”***

***(சிலம்பு.மதுரை.புறஞ்சேரி இறுத்தகாதை, வரி:94-95)***

இவ்வாறு கோவலன் தான் செய்த தவற்றை உணர்ந்து வருந்தும் நல்ல மனிதனாக இளங்கோவடிகளால் படைக்கப்பட்டிருக்கின்றான்.அனைத்திற்கும் மேலாகக் கோவலன் மதுரையின் புறத்தாகிய புறஞ்சேரியில் கவுந்தியடிகளோடும் கண்ணகியோடும் தங்கியிருக்கும் போது கவுந்தியடிகளை வணங்கி,

***“நெறியின் நீங்கியோர் நீர்மையே னாகி***
***நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த***
***அறியாத் தேயத் தாசிடை யுழந்து***
***சிறுமை யுற்றேன் செய்தவத் தீர்யான்”***

***(சிலம்பு. மதுரை.ஊர்காண். காதை, வரி:17-20)***

எனத் தான் செய்த தவறுக்கு மிகவும் வருந்திக் கூறுகின்றான். இறுதியாக ஆயர்சேரியில் மாதரி இல்லத்தில் கண்ணகி சமைத்த உணவை உண்டு அவளை அருகணைத்து,

***“இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்***
***சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேண்***
***வழுவெனும் பாரேன் மாடுகர் மருங்கீண்***

*டெழுகென எழுந்தாய் என்செய்தனை?"*

*(சிலம்பு.மதுரை.கொலைக்களக்காதை, வரி.67-70)*

எனக்கூறி வருந்துகின்றான்.

**கோவலனின் வீழ்ச்சி**

இவ்வாறு கோவலன் தான் செய்த தவற்றைப் பலமுறை நினைந்து கவுந்தியடிகள், கண்ணகி, கோசிகன் ஆகியோரிடம் வருந்திக் கூறியபோதும், அவன் அந்த இழிவையும் இழப்பையும் ஈடுசெய்யும் முயற்சியில் ஈடுபட்டபோதும் அவன் கொலை செய்யப்படுவது பேரவலமாகும். 'நீ ஏன் மதுரைக்குப் புறப்படு என்று யான் சொன்னவுடன் புறப்பட்டாய்?' என்று கோவலன் கேட்டதும் கண்ணகி,

*"..................... ............ ........ பாவதும்*
*மாற்றா உள்ள வாழ்க்கையே னாதலின்*
*ஏற்றெழுந் தனன் யான்"     (சிலம்பு. மதுரை. கொலைக்களக்காதை, வரி:82-84)*

என்கின்றாள். இதனைக் கேட்ட கோவலன் கண்ணகியின் கற்பின் திண்மையை நினைத்து நெஞ்சுருகினான். பின்னர் அவன் கண்ணகியிடம் நின் இரண்டு சிலம்புகளுள் ஒன்றை யான் கொண்டு விற்று வருகிறேன்; யான் வருந்துணையும் நீ வருந்தாதே' எனக் கூறிக் கண்ணகியைப் பிரிகின்றான்.

*"கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி*
*சீறடிச் சிலம்பின் ஒன்றுகொண் டியான்போய்*
*மாறி வருவன் மயங்கா தொழிக"     (சிலம்பு. மதுரை. கொலைக்கள., வரி.91-98)*

தன் தவற்றை நெஞ்சார உணர்ந்து கண்ணகியின் கற்பின் பெருமையை வியந்து பாராட்டும் கோவலனின் பண்பட்ட உள்ளம் படிப்பவர் உள்ளத்தில் இரக்கத்தைத் தோற்றுவிப்பதாக உள்ளது.

மதுரை வீதியில் கொல்லர் நூற்றுவர் பின்தொடர வரும் அரண்மனைப் பொற்கொல்லனைக் கோவலன் கண்டான். அவனிடம் தன் சிலம்பைக் காட்டி அதன் விலையை மதிப்பிடக் கேட்டான். மாணிக்கமும் வைரமும் பதித்த பொன்னாலான சிலம்பைக் கண்ட பொற்கொல்லன், அச்சிலம்பு தான் திருடிய பாண்டிமாதேவியின் சிலம்போடு ஒத்திருப்பதைக் கண்டான். அச்சிலம்பு கோப்பெருந்தேவிக்கே பொருந்தும் என்றும், அதை மன்னனுக்குத் தெரிவித்து வரும்வரை தன் சிறிய குடியில் இருக்குமாறும் கூறிய பொற்கொல்லன் மன்னன் மாளிகைக்குச் சென்றான். பாண்டிய மன்னன் அரசியின் ஊடலைத் தீர்க்க அவள் மாளிகையை நோக்கி விரைந்து கொண்டிருந்தான். அம்மன்னனிடம் பொற்கொல்லன் அரசியின் சிலம்பினைத் திருடிய கள்வன் தன் சிறுகுடிலில் இருப்பதாகக் கூறினான். மன்னன் அரசியின் சிலம்பு அக்கள்வன் கையில் இருக்குமாயின் அக்கள்வனைக் கொன்று அச்சிலம்பினைக் கொணர்க என ஆணையிட்டான்.

பொற்கொல்லன் ஊர்க்காப்பாளரைக் கோவலனிடம் அழைத்துச் சென்று அவர்களுக்குச் சிலம்பைக் காட்டுமாறு கோவலனிடம் கூறுகின்றான். ஊர்க்காப்பாளருள் ஒருவன் கோவலன் தோற்றத்தைக் கண்டு அவன் கள்வன் அல்லன் என்கின்றான். அதற்குப் பொற்கொல்லன் கள்வர் மற்றும் களவுத்தொழில் பற்றித் தக்க சான்றுகளுடன் நீண்டதோர் உரை நிகழ்த்துகின்றான். அப்போது ஊர்க்காப்பாளருள் ஒருவனாகிய கல்லாக்களிமகன் சற்றும் சிந்திக்காமல் கோவலனை வெட்டினான். இவ்வாறு கோவலனின் வாழ்க்கை பெரும் துன்பியலாக முடிகின்றது.

**கோவலன் கொலைக்களத்தில் ஏன் பேசவில்லை?**

பொற்கொல்லன் ஊர்க்காப்பாளரிடம் கோவலனைக் காட்டி 'அவன் கள்வன்' எனக் கூறியதும் கோவலன் தான் குற்றமற்றவன் எனப் பேசியிருக்கலாம். அவன் எதுவுமே பேசவில்லை. அவ்வாறு கோவலன் பேசியிருந்தால் அவன் தன்னை அழிவிலிருந்து பாதுகாத்திருக்கலாம். தன்மீது திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டதுமே கோவலன் திடுக்கிட்டு அதிர்ச்சியில் பேச்சினை இழந்தான் எனக் கொள்ளலாம். கோவலன் தான் கள்வன் அல்லன் என அவர்களிடம் விவாதித்தாலும் இழிமக்களாகிய அவர்கள் தன் சொல்லை ஏற்கமாட்டார்கள் என நினைத்தும் அவன் வாய்திறவாமல் மௌனமாக இருந்திருக்கலாம்.

காப்பியத்தின் இப்பகுதியில் பொற்கொல்லனும் ஊர்க்காப்பாளரும் மாறிமாறி உரையாடிக் கோவலனுக்குப் பேசுவதற்கே வாய்ப்புக் கொடுக்கவில்லை; கோவலன் உண்மையில் பேச விரும்பி இருப்பினும் அதற்குக் கோவலனுக்குப் பொற்கொல்லன் வாய்ப்புத் தந்திருக்கமாட்டான். அரசியின் சிலம்பைத் திருடிய பொற்கொல்லன், மன்னனின் ஆதரவோடு அதிலிருந்து தப்பிக்க வலுவான சூழ்ச்சித் திறனைக் கையாளுகின்றான்.கல்லாக் களிமகன் திடீரெனக் கோவலன் மீது வாளை வீசும்போது அதிர்ச்சியும் அச்சமுமே ஏற்படுகின்றன.

**கோவலன் - சாவக நோன்பி**

சமணசமயத்தின் உயிர்நிலையான கோட்பாடு கொல்லாமை ஆகும். உயிர்களுக்கு இம்சை செய்யாமை மட்டும் கொல்லாமை அன்று; அனைத்துயிர்களிடமும் அன்பு காட்டுவதும் இதனுள் அடங்கும். உதவி செய்யக்கூடிய நிலையில் உதவி செய்யாமல் இருப்பதும் இம்சையே. கோவலன் கொலை செய்யப்பட்டதையும் கண்ணகி விண்ணகம் சென்றதையும் கேட்டுக் கொடுந்துயர் எய்திய கோவலன் தந்தை மாசாத்துவான் துறவியாகிப் பௌத்த சங்கத்தில் சேர்ந்தார். ஆதலால் மாசாத்துவான் இல்லறத்திலும் பௌத்தராகவே வாழ்ந்தார் என அனுமானிக்கலாம். மாதவி தொடர்பாலும் கோவலன் சமணன் ஆகவில்லை. கோவலன் கொலையைக் கேட்டுக் கையறுநிலையில் கதறிய மாதவி பௌத்தத் துறவியாகின்றாள். அவளது மகள் மணிமேகலையும் பௌத்த சமயத்தையே தழுவுகின்றாள்.

கண்ணகியின் தந்தை சமயத் துறவியாதலால் கோவலன் பெண் எடுத்த மாமனார் வீட்டின் சூழலில் அருகதேவனை வழிபட்டுச் சமணன் ஆனதாகக் கொள்ளலாம். அன்பு நெறியில் பௌத்தம் வளர்ந்தது எனினும், கொல்லாமை அறத்தைச் சமணரே கண்டிப்பான முறையில் பின்பற்றினர். அதனாலேயே கோவலன் சமணத்தைத் தழுவினான். கோவலன் அருக சமயத்தவன் என்பதை இளங்கோவடிகள் ஐயமின்றித் தெளவுபடுத்தியுள்ளார். மதுரை செல்வதற்காகக் கோவலனும் கண்ணகியும் பூம்புகாரை நீங்கிக் காவிரிக் கரைவழியே மேற்கே சென்று சமணத் துறவியாகிய கவுந்தியடிகளின் தவப்பள்ளியை அடைந்து அவரைத் தொழுதனர். அப்போது கவுந்தியடிகள் அவர்களை விளித்து,

***“உருவும் குலமும் உயர்பே ரொழுக்கமும்***
***பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்***
***உடையீர்”*** ***(சிலம்பு. புகார். நாடுகாண் காதை, 46-48)***

என்கின்றார். சமணம் ஒன்றே மெய்யான சமயம் எனக் கருதும் கவுந்தியடிகள் மகாவீரரின் அறவுரைகளையே ‘பெருமகன் திருமொழி’ எனத் தெளிவாகக் கொள்பவர். “துறவறம்” மேற்கொள்ளாமல் விரதம் காக்கும் சமணர்களையே “சாவக நோன்பிகள்” என்பர். (எஸ்.இராமகிருஷ்ணன், இளங்கோவின் பாத்திரப்படைப்பு, ப.48) கண்ணகியை அடைக்கலம் பெற்ற இடைக்குலப் பெண்ணாகிய மாதவி “சாவக நோன்பிகள்” என்றே கோவலனைக் குறிப்பிடுகின்றாள். கண்ணகியைத் தக்கதோர் இல்லத்தில் தங்க வைத்துவிட்டு தன்மகள் ஐயையைத் துணையாக வைத்து மாதரி தன்குலப் பெண்களிடம்,

***“சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்***
***நாத்தூண் நங்கையொடு நாள்வழிப் படூஉம்***
***அடிசில் ஆக்குதற்கு அமைந்த நற்கலங்கள்***
***நெடியாது அளிமின் நீர்”*** ***(சிலம்பு.மதுரை. கொலைக்கள. வரி.18-21)***

என்கின்றாள். கோவலன் சாவக நோன்பியாதலால் சூரியன் மறைந்த பின்னர் அவன் உணவு உண்ணான். ஆதலால் கண்ணகியும் ஐயையும் காலம் கடத்தாமல் உணவு சமைப்பதற்குப் பாத்திரங்களைக் கொண்டுவரச் சொல்கின்றாள் மாதரி. கோவலன் சாவக நோன்பியாக இருந்தும் பிறசமயக் கடவுளரையும் வணங்கி வழிபட்டான். இருவரும் விடியற்காலத்தில் புகாரைவிட்டு மதுரைக்குப் புறப்பட்டபோது திருமாலின் கோயிலை வலம் செய்தனர். இந்திர விகாரங்களை வணங்கினர். சிலாதலத்தைத் தொழுதனர்.

***“அணுகிளர் அரசின் அறிதுயில் அமர்ந்த***
***மணிவண்ணன் கோட்டம் வலம்செயாக் கழிந்து”***

***(சிலம்பு.புகார்.நாடுகாண் காதை, வரி:9-10)***

சமண மந்திரத்தில் அசோக மரத்தின் நிழலில் சிலதலம் அமைந்திருந்தது. விழுமிய நாட்களில் சாரணர் வருவரென்று அவர்களுக்காகச் சாவக நோன்பிகள் அமைத்த சிலாவட்டம் அதுவாகும்.

*“நீரணிவிழவினும் நெடுந்தேர் விழவினும்*
*சாரணர் வருஉம் தகுதிஉண் டாமென*
*உலக நோன்பிகள் ஒருங்குடன்இட்ட*
*இலகொளிச் சிலாதலம் தொழுது வலங்கொண்டு” (சிலம்பு.புகார்.நாடுகாண்.வரி:22-25)*

கோவலனும் கண்ணகியும் அச்சிலாவட்டத்தை வழிபட்டதைக் குறிப்பிடும் இளங்கோவடிகள், சர்வசமய சமநோக்கால் சிறந்த சாவக நோன்பியாகக் கோவலன் விளங்கியதைக் காட்டியுள்ளார்.

**கோவலன் மனவளர்ச்சி**

பெற்றோர் ஈட்டிய செல்வம் அனைத்தையும் இழந்த பின்னரே கோவலன் புதிய வழியைத் தேடுகின்றான். தன்னை நாடிய ஆடவர்களின் பொருட்களைக் கவர்ந்து கொண்டு அதன்பின்னர் அவர்களைக் கைவிடும் வேசியர் வழியை அறியாதவள் மாதவி. ஆயினும் அவள் கோவலன் தனக்குச் செய்த பொருட் செலவினைத் தடுக்கவில்லை. அறிவன் முதிர்ச்சி பெறாத கோவலன் தன்னிடம் பொருள் இன்மையால்தான் மாதவி பிணங்குவதாக நினைக்கின்றான். அவள் வேறொருவனைக் காதலிப்பதைப் போல கானல்வரி பாடியதால் கோவலனின் ஐயம் முற்றுகின்றது. எனவே மாதவியைத் துறந்த கோவலன் கண்ணகியிடம் சென்று குலம்தரும் வான்பொருளைத் தொலைத்த இலம்பாடு (வறுமை) வெட்கத்தைத் தருவதாகக் கூறுகின்றான். ஒழுக்கத்திலிருந்து தான் வழுவியமைக்காக இங்கு கோவலன் வருந்தவில்லை. அவன் கண்ணகியிடம் மாதவியைப் பழித்து மன அமைதியைத் தேடவே விழைகின்றான். முழுவதும் திருந்தாமல் வறுமைக்காகக் கோவலன் வருந்துவதைக் கண்ட கண்ணகி ‘சிலம்புள கொண்ம்’ என்றாள்.

அச்சிலம்பை மூலதனமாகக் கொண்டு சிதறிய செல்வத்தை மீண்டும் ஈட்டுவதற்குக் கண்ணகியோடு கோவலன் மதுரைக்குப் புறப்பட்டான். செல்வச் செழிப்பில் வாழ்ந்த கண்ணகி நடப்பதற்கு அவதிப்பட்டு பலகாதச் சேய்மையிலுள்ள மதுரையை நெருங்கி விட்டதாக நினைத்துக் கோவலனிடம் ‘மதுரை மூதூர் யாதோ?’ என வினவுகின்றாள். அவளது அறியாமையை நினைத்துக் கோவலன் துயரம் கொள்கின்றான். பிறப்பு, பண்பாடு, பொருளால் சிறந்த கோவலனும் கண்ணகியும் அகதிகளைப் போலத் தன்னை வணங்குவதைக் கண்ட கவுந்தியடிகள் திகைக்கின்றார். கோவலன் ‘மதுரை மூதூர் வரைபொருள் வேட்கையேன்’ (சிலம்பு. புகார். நாடுகாண். வரி.51) என்கின்றார். ஆயினும் தவத்தியிடம் மனம் திறந்து பேசும் துணிவு கோவலனுக்கு இல்லை. கவுந்தியடிகள்,

*“உரியதன்று ஈங்கொழிகென ஒழியீர்;*
*மறவுரை நீத்த மாசறு கேள்வியர்*
*அறவுரை கேட்டிங்கு அறிவினை ஒத்தத்*
*தென்தமிழ் நன்னாட்டத் தீதுதீர் மதுரைக்கு*
*ஒன்றிய உள்ளம் உடையேன் ஆகலின்*
*போதுவல் யானும் போதுமின்” (சிலம்பு.புகார். நாடுகாண். வரி.55-60)*

என்கின்றார். இதனைக் கேட்ட கோவலன் கண்ணகிக்கு அடிகளின் அருள் துணையாக அமைந்ததில் ஆறுதல் பெறுகின்றான். சிற்றினச் சேர்க்கையால் சீரழிந்த கோவலனுக்குக் கவுந்தியடிகளும் கண்ணகியும் நல்லினமாக அமைவதால் அவன் திருந்த வாய்ப்பு ஏற்படுகின்றது. இதனால் வசந்தமாலை வடிவில் வந்த வனதெய்வம் கோவலனை வஞ்சிக்க முடியவில்லை. வசந்தமாலை வடிவில் வந்த வனதெய்வம் கோவலனை வஞ்சிக்க முடியவில்லை. கானத்தில் வெய்யிலின் வெம்மைபோல் அடிபாவமுடியாமல் கண்ணகி வருந்துவதைக் கண்ட கோவலன் கவுந்தியடிகளிடம் பாண்டிய நாட்டின் செங்கோன்மையால் கொடிய விலங்குகளும் துன்பம் செய்யாது என்பதால் இரவில் நடக்கலாம் என்கின்றான். அடிகளும் ஏற்கின்றார்.

கானம் வந்து கண்ணகி கடுந்துயர் உறுவதற்குக் காரணமாக இருந்ததால் கோவலன் அடைந்த வருத்தம் பெரிது. அவன் உள்ளம் புலம்பி உருக்குலைந்து விட்டான். அதனாலே மாதவியின் தூதுவனாகிய கோசிகன் கோவலனை அடையாளம் காண இயலவில்லை. கோசிகன் கொடுத்த மாதவியின் கடிதம் மாதவி குற்றமற்றவள் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. மாதவி கோவலனுக்கு அனுப்பிய கடிதம் அவன்

பெற்றோர்க்கு அனுப்பும் தகுதியுடையதாகின்றது. மாதவியின் தூய்மையை உணர்ந்த நிலையில் கோவலன் தனது குற்றத்தை உணர்ந்து கவுந்தியடிகளிடம் மனம் திறந்து பேசுகின்றான். கவுந்தியடிகளும் கோவலனுக்கு "தவம் தீர் மருங்கின் தனித்தயர் உழந்தோய்" (சிலம்பு. மதுரை. ஊர்காண். வரி.26) என ஆறுதல் கூறுகின்றார்.

மதுரையில் கோவலன் பற்பல வீதிகளையும் கண்டபோதும் கடைவீதிகளையும் கணிகையர் வீதிகளையும் இளங்கோவடிகள் விரிவாக வர்ணனை செய்கின்றார். மதுரையில் பரத்தமைப் பெருக்கத்தைக் காட்டும் இளங்கோவடிகள், மதுரையும் புகாரின் மறுபதிப்புத்தான் எனக் காட்டுகின்றார். மதுரை ஒழுக்கம் கெட்டு அழிவினை நோக்கி இருப்பதையே இந்த வருணனைகளில் இளங்கோவடிகள் காட்டுகின்றார். கோவலன் மதுரைக்குள் தனியே சென்றதன் நோக்கம் தம் இனத்தவரைக் கண்டு பேசி தொழிலுக்கு ஆவண செய்யவே. அவன் கவுந்தியடிகளிடம்,

***"தொன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு***
***என்னிலை உணர்த்தி யான்வருங்காலும்***
***பாதக் காப்பினள் பைந்தொடி ஆகலின்***
***ஏதம் உண்டோ? அடிகள்" (சிலம்பு. மதுரை. ஆய்ச்சியர் குரவை, வரி:21-24)***

என்கின்றான். ஆயினும் கோவலன் தம் குலத்தவரைக் கண்டு பேசவில்லை; மதுரையின் பெருமையைப் பேசுகின்றான். அதற்குள் அங்கு வந்த மாடலன் கோவலன் புகழைப் பேசுகின்றான். அதனைத் தொடர்ந்து கோவலன் தான் கண்ட கனவினைக் கூறினான். கவுந்தியடிகள் அவன் தன் கிளையைக் காணாது மீண்டான் என உய்த்தறிகின்றார். இதற்குக் காரணம் கோவலன் தம் குலத்தாரிடம் தான் சிறுமையுற்றதைக் கூறுவதற்கு நாணியதே எனலாம்.

புல்லன் ஒருவனால் மதுரையில் கண்ணகி பெருந்துயர் எய்தினாள் என்றும், தான் உடுத்த உடையை இழந்து எருமைக்கடாமீது ஏறிச்சென்றதாகவும், பின்னர் இருவரும் வீடுபேற்றினை அடைந்ததாகவும், மாதவி மணிமேகலையைப் புத்த சங்கத்தில் சேர்த்ததாகவும் கோவலன் இரவின் கடையாமத்தில் கனவு கண்டான். அது விரைவில் பலிக்குமென்று கோவலன் செயலற்று வருந்தினான். கவுந்தியடிகளும் மாடலனும் அவன் கண்ட கனவிற்குப் பலன் கூறவில்லை. தவசிகளுக்குரிய புறஞ்சேரியில் கோவலனும் கண்ணகியும் தங்கியிருப்பது நன்றன்று; மதுரை வணிகர் அவனது புகழால் அவனை அறிந்து ஏற்பர் என்பதைக் கவுந்தியடிகள்,

***"காதலி தன்னொடு கதிர்செல் வதன்முன்***
***மாட மதுரை மாநகர் புகுவென" (சிலம்பு, மதுரை. அடைக்கல. வரி:111-112)***

எனக் கூறுகின்றார். ஆயினும் காலையில் தனியே சென்ற கோவலன் மாலையில் தம் இனத்தவரைக் காணாமல் திரும்பியதால்தான் கவுந்தியடிகள், மாதரியிடமும் கண்ணகியை அடைக்கலம் கொடுத்தார். மாதரிதந்த தனிமனையில் புகுந்தபின்னர் அடுத்து என்ன செய்ய வேண்டுமெனவும், தம் குலத்தாரைக் காணும் எண்ணமும் கோவனிடம் தோன்றவில்லை. சிலம்பை விற்று அப்பொருளால் தம் வாழ்வைச் சீரமைக்கவே கோவலன் துணிகின்றான்.

**முடிவுரை**

சிலப்பதிகாரத்தின் கதைத்தலைவனான கோவலனின் பாத்திரப்படைப்பு பன்முகப் பார்வையில் ஆய்வுக்குரியது. தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் அவனைத் தன்னிகரில்லாத தலைவனாகப் படைக்கவில்லை; நிறைகளும் குறைகளும் கொண்ட சராசரி மனிதனாகவே படைத்துக் காட்டியுள்ளார்.

**பயன்பட்ட நூல்கள்**

[1] இராமகிருஷ்ணன், எஸ்., இளங்கோவின் பாத்திரப்படைப்பு, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 2015.
[2] ஞானமூர்த்தி, தா.ஏ., அவலவீரர்கள், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1992.
[3] மீனாட்சி சுந்தரனார், தெ.பொ., குடிமக்கள் காப்பியம், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2010.
[4] சஞ்சீவி, ந., சிலப்பதிகார விருந்து, தமிழ்வளர்ச்சி இயக்ககம், சென்னை, 2014.

[5] மாணிக்கனார், வ.சுப., எந்தச் சிலம்பு?, பாவை பப்ளிஷர்ஸ், சென்னை, 2011.
[6] சிவஞானம், ம.பொ., சிலப்பதிகாரத் திறனாய்வு, பூங்கொடி பதிப்பகம், சென்னை, 2007.
[7] அருணாசலம், ப., சிலப்பதிகாரச் சிந்தனை, பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1971.
[8] கந்தசாமி, சோ.ந., புரட்சிக்காப்பியம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2009.
[9] விசுவநாதம், கி.ஆ.பெ., இளங்கோவும் சிலம்பும், பாரிநிலையம், சென்னை, 1984.
[10] மாணிக்கவாசகன், ஞா., சிலப்பதிகாரம் தெளிவுரை, உமா பதிப்பகம்,சென்னை, 2010.